# இடர்கால வாராந்தப் பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

## க.பொ.த (உ/த) – தரம் -12

02. ‘அ’ பகுதியில் உள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

பாடுகின்றோர் எல்லோரும் கவிஞரல்லர்
பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமையல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல
உணர்ச்சியாலே ஊற்றெடுத்த ஒளியால் ஏங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்குமாற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சிகொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞனாவான்

பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்து
பாடுகின்ற கவிதைகளும் பாரான், வேந்தர்க்
கஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்து போகும்
கஞ்சியின்றி கந்தை சுற்றி வாழ்வானேனுங்
கனல்வீசி எரிமலைதீ கக்கல் போலே
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப்பட்டு
விருந்தளிக்கும் விறலோனே கவிஞனாவான்!

கற்கண்டே செழுந்தேனே கனியே யென்று
கலகலப்பாய்ச் சுவைப்பெயர்கள் கலந்து நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதையெல்லாஞ்
சொன்னவர்க்குத் தெரியாமல் தொலைந்து போகும்
விற்கொண்டு விடும் வீரன் போல
விசைகூடும் அறிவுப்போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோர்
சாற்றுகின்ற கவிதையென்றுஞ் சாதலில்லை!

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்து பார்த்து
விம்மாமற் பெருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்குமா ரடிக்கின்ற மெல்லியர்போல்
சும்மாவோர் உணர்வின்றி சொற்கள் சேர்த்து
சொன்மாலை தொடுக்கின்றோர் கவிஞரல்லர்
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கி நிற்போர் கவிஞரல்லர்!

பாட்டினுக்கோர் புலவனென்றே தமிழ் நாடெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்.
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கையின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்புவோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதினாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்!

01. கவிஞன் என்பவன் எத்தகைய பண்புகள் உள்ளவனாக இருக்கவேண்டும் என கவிஞர் வலியுறுத்துகிறார்?

02. நிலைத்திராது அழிந்து போய்விடும் கவிதைகள் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

03. உண்மைக்கவிஞன், இறவாது நிலைத்து வாழும் கவிதைகள் பற்றி கவிஞனின் நிலைப்பாடு எத்தகையது என கவிதையினூடாக உய்த்துணர முடிகிறது?

04. இக்கவிதையினை வெளிப்படுத்த கவிஞர் கையாண்ட உத்தி முறைகளைக் குறிப்பிடுக.

05. கவிஞர் கையாண்டுள்ள அணியின் பொருத்தப்பாட்டை விளக்குக.

2. "பாரதி யென்றொரு தாமரை பூத்தது பாரத நாடெனும் வாவியிலே...."

எனும் கவிதையினை ஆதாரமாகக் கொண்டு

01. செந்தமிழ்ப் புலவர் மு. நல்லத்தம்பி அவர்கள் பாரதி மற்றும் பாரதி பாடல்கள் மீதும் கொண்டிருந்த ஆழமான பக்தி எவ்வாறு புலப்படுகிறது?

02. பாரதி பாடல்களில் காணப்படும் சிறப்புக்கள் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

03. கவிஞர் அணிகளைக் கையாளும் ஆற்றல் குறித்து கருத்துரைக்குக.

04. இக்கவிதையில் காணப்படும் சிறப்புக்கள் எவை?

